# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 54 பிரசோற்பத்தி தை 06 ( 20 01 1992 ) திங்கள்


## காணாமற் போனோர் விவரம் அமெரிக்க செனட்டர் பார்வை

அமெரிக்க செனட்டர் லரி பிரஸ்லர் தனது தெற்காசிய விஜயத்தின் ஒரு கட்டமாக கொழும்பு வந்துள்ளார்.

இவர் பிரதமர் மற்றும் பல அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க செனட்டர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலகத்திற்கு சென்று அதன் செயலாளர் ஏயர் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோவையும் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பாக பொது மக்கள் வழங்கிய முறைப்பாடுகள் அடங்கிய கோவைகளையும் இவர் பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனோர் குறித்து வெளியான குற்றச்

—04 ஆம் பக்கம் பார்க்க

# மல்வத்தை பீட விபசி நாயக்க தேரர் இராணுவ முகாம்களுக்கு விஜயம்!

## படையினருக்கு ஆசி வழங்கினாராம்!

தென்னிலங்கை மல்வத்தை பீட மஹா சங்கத்தின் தேரர் ரம்புக்வல விபசி நாயக்க தேரர் வடபகுதி இராணுவ முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். பலாலி, காரைநகர், நயினாதீவு, வவுனியா இராணுவ முகாம்களுக்கும் அநுராதபுரம் இராணுவ செயற்பாட்டு அலுவலகத்திற்கும் இவர் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி இராணுவ முகாம்களுக்கு கடந்த 2 நாட்களாக சுற்றுப் பயணம் செய்த மல்வத்தை பீடாதிபதியுடன் ஏனைய மஹாசங்க பிக்குகளும் கண்டி தலதாமாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னவும் கூட வந்திருந்தனர்.

பீடாதிபதி ரம்புக்வல விபசி நாயக்க தேரோ தாம் சென்ற இராணுவ முகாம்களில் போதி பூஜைசெய்து பிரித் ஓதி இராணுவத்தினருக்கு ஆசிவழங்கினாராம்.

யாழ் பகுதியின் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜயவிமலரட்ன வடபகுதி ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ ஆகியோரே இப் பௌத்த தேரோக்களின் விஜயத்தை ஒழுங்கு செய்தனராம்.

இவர்களது விஜயத்தை யொட்டி வடபகுதி இராணுவ முகாம்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

மல்வத்தை பீடாதிபதி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை கம்பியூட்டரில் தேடுகின்றனர்!

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் எந்தத் தடுப்பு முகாமில் உள்ளார் என்பது குறித்து தமக்குத் தெரியாது என அரச சார்பு மனித உரிமைச் செயலணிக்குழுத் தலைவர் ஏ.சூசா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அவர் சந்திரசேகரன் தடுப்பு முகாம்களில் இருந்தால் அது பற்றி

...04 ஆம் பக்கம் பார்க்க

## சந்திரசேகரன் வழக்கு உயர் நீதிமன்றத்துக்குப் பாரம்

தடுத்துவைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் செயலாளர் காதர், உபதலைவர் தர்மலிங்கம் ஆகியோர் சார்பாக தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு விசாரணையை மேன் முறையீட்டு நீதிபதி சாத் என்.சில்வா உயர் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தியுள்ளார்.

கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பான சந்தேக நபர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை மாணவர்களுக்கு அறிவியல் கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினர் பாடசாலை மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகளை

மாசடைதல்' பற்றி செ.பாலச்சந்திரன், இளவாலை மெய்

...04 ஆம் பக்கம் பார்க்க

## 750 இலங்கை அகதிகள் இன்று திருமலை புறப்பாடு!

இலங்கை அகதிகளின் முதற் தொகுதியான 750 பேர் இன்று காலை சென்னை துறைமுகத்திலிருந்து திருகோணமலை புறப்படுகின்றனர்.

இவர்கள் நாளை திருமலை வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அகதிகளின் முதல் கட்டமாக மூவாயிரம் பேர் திருமலை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பல இடங்களிலும் உள்ள அகதி முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் சென்னை துறைமுகம் பகுதிக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தபாலகங்களில் வெற்றிடங்கள்

முல்லை மாவட்டத்தில் சகல தபாலகங்களிலுமுள்ள தபால் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிரப்ப கொழும்பு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்

...04 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

நேற்று வளலாய்ப்பகுதியில் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து பலாலி முகாமிலிருந்து கதிரியாய், இடைக்காடு, தம்பாலைப் பகுதிகளுக்கு படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதேநேரம் ஹெலிகப்டர் ஒன்றும் இப்பகுதிகளில் கலிபர் தாக்குதலை நடத்தியது.

07

## இஸ்ரேலிய அரசு பெரும்பான்மை இழந்தது

இஸ்ரேலியப் பிரதமர் ஷமீரின் அரசு பாராளுமன்றத்தில் அதன் பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்டது. இவரின் ஆளும் லிக்குட் கட்சிக்கு ஆதரவளித்த இரு சிறிய வலதுசாரிக் கட்சிகள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதே இதற்கு காரணமாகும்.

இந்த இரு சிறிய கட்சிகளும் 120 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தில் 5 ஆசனங்

டங்களைக் கொண்டுள்ளதால் தற்போது நடைபெறும் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையில் இஸ்ரேலின் நிலை கேள்

— 04 ஆம்பக்கம் பார்க்க

## சீனாவின் குற்றச்சாட்டு

மனித உரிமைகளைப் பேணுவதாகப் பிரகடனப்படுத்தும் அமெரிக்காவும் மற்ற நேச நாடுகளும் மனித உரிமை

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் கரையோர மக்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம்

இராணுவ நடவடிக்கைகளி... பகுதிகளிலும் யாழ்ப்பாணம்...

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினர் பாடசாலை மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகளை பாடசாலைகள் தோறும் நடத்த உள்ளனர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பின்வருமாறு விரிவுரைகள் தொடங்கப்படும்.

இளவாலை சென் ஹென்றிஸ் பாடசாலையில் 'சூழல் மாசடைதல்' பற்றி செ. பாலச்சந்திரன், இளவாலை மெய்

...04 ஆம் பக்கம் பார்க்க

கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பான சந்தேக நபர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படை கொடுமையான சித்திரவதை செய்தது

இந்திய அமைதிப்படையும் அதைச் சார்ந்த குழுக்களும் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்தவர்களைக் கொடுமையான சித்திரவதைக்குள்ளாக்கியதாக சர்வதேச மனித உரிமைக் கழகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் மீது அதிர்ச்சிக்குட்படுத்தப்பட்டதாகவும், இப்படிப்பட்ட சித்திரவதைகளின் போது பலர் இறந்ததாகவும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தொண்டமான் தமிழகம் சென்றார்

அமைச்சர் தொண்டமான் 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமிழகம் சென்றுள்ளார். இவர் திருநெல்வேலியில் தங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தமிழகம் சென்றுள்ளதற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

டதே இதற்கு காரணமாகும். இந்த இரு சிறிய கட்சிகளும் 120 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தில் 5 ஆசனங்களைக் கொண்டவை.

பிரதமர் ஷமீரின் அரசு ஆட்

## இலவச உலர் உணவு நிவாரணம்

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு மீன்பிடித் தொழிலை இழந்து பரிதவிக்கும் யாழ்ப்பாணக் கரையோரக் குடும்பங்களுக்கு யாழ் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் விசேட உணவு அனுமதி அட்டை வழங்கப்பட்டதையடுத்து இக்குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் சென்ற வாரத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

★ கர்நாடக அமைச்சரின்கிண்டல்

## தைப்பொங்கலுக்கே தமிழகத்தோர் சென்றனர்

''தமிழக அரசு கூறுவது போல கர்நாடகத்திலிருந்து அவ்வளவு தொகையான தமிழக அகதிகள் செல்லவில்லை தமிழகத்திற்கு இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தைப்பொங்கல் கொண்டாட தமது சொந்த இடங்களுக்குச் சென்றவர்களேயாவர்'' என்கிறார் கர்நாடக உள்ளூராட்சி அமைச்சர் தரம்சிங்.

''நடிகர் ரஜனிகாந்த் ரசிகர் படையுடன் பெங்களூர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரு கப்பல்கள் வருகின்றன

உணவுப் பொருள்களுடன் குமாரி கப்பல் இன்று பருத்தித்துறைதுறை முகத்தை வந்தடைய உள்ளது.

3200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களான

—04 ஆம் பக்கம் பார்க்க

# வளலாய் காவலரணருகே மோதல்

# 5 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

நேற்றுக்காலை வளலாய்ப் பகுதி காவலரணிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதில் 5 படையினர் பலியாகினர்.

காலை 7 மணியளவில் படையினர் வளலாய்ப் பகுதி காவலரணிலிருந்து வெளியேறியபோது காவலரணிலிருந்து 100 யார் தூரத்தில் வைத்து புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

சுமார் நான்கு நிமிடம் நடைபெற்ற இத் தாக்குதல

—04 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் சில இடங்களில் மீளக்குடியமர்வு

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடமராட்சி கிழக்குக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து செம்பியன்பற்று, மாமுனை நாகர் கோவில் கிராமங்களில் தங்கியிருந்த குடும்பங்களில் ஒரு பகுதியினர் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை

—04 ஆம் பக்கம் பார்க்க

மின்சாரச் சித்திரவதைக் கருவிகள்

# ‘பிரிட்டிஷ் மரண வர்த்தகர்கள்’

# மன்னிப்புச்சபை கண்டனம்

''பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பிரிட்டன் விற்பனை செய்து அதன் மூலம் மனித உரிமை மீறலுக்கு உலகெங்கும் உதவியும் ஊக்கமும் அளிக்கிறது''

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை தனது பிந்திய அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

தூக்குமேடை உபகரணங்கள், கால் விலங்குகள், மின்சாரச் சித்திரவதைக் கருவிகள் ஆகியவற்றைப் பிரிட்டிஷ் நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன என்று இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாக். அணியை ஸ்ரீலங்கா வெற்றிகொண்டது

ஸ்ரீலங்கா, பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 40 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் பந்தயத் தொடரில் 4 ஆவது போட்டியில் ஸ்ரீலங்கா அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 40 பந்து மாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஸ்ரீலங்கா அணி அதன் துடுப்பாட்டத்தில் 36 பந்து மாற்றங்களில் 4 இலக்குகளைப் பறிகொடுத்து வெற்றி இலக்கான 176 ஓட்டங்களை இலகுவாகப் பெற்று வெற்றியீட்டியது, (16)

## சார்க் பிரதிநிதிகள் பங்குபற்றும் கருத்தரங்கு

சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் 'அழிவுகளும், அவற்றை எதிர்கொள்ளுதலும், தயாராக இருப்பதும்'' என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13-ம் திகதி தொடக்கம் 16-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் சார்பில் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் குழுவிற்கும் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார், (13)

## பஞ்சாப் தேர்தல் சூடும் தீவிரவாதிகள் ‘சூடும்’

பஞ்சாப்பில் தேர்தல் பணிகள் சூடுபிடித்துள்ள அதே வேளை தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சூட்டுச் சம்பவங்களும் தொடர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

117 சட்டசபைத் தொகுதிகளில் 60 இலும் 13 லோக்சபாத் தொகுதிகளில் 7 இலும் போட்டியிடுவதெனப் பாரதிய ஜனதாக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்கூட இரு பொறியியலாளர்கள் உட்பட ஐவரை தீவிரவாதிகள் மின்சார வாரியத்துக்குள் நுழைந்து சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தேர்தலில் போட்டியிட இந்திரா காங்கிரஸ் உட்பட பல கட்சிகள் தீர்மானித்துள்ளன.

## கப்பலில் சுருட்டு ஏற்றுமதி புதனன்று கலந்துரையாடல்

தென்பகுதிக்குக் கப்பல் மூலம் சுருட்டு அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடபிராந்தியச் சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபரும் செஞ்சிலுவைச் சங்க உயரதிகாரியும் கலந்து கொள்ளவுள்ள இக்கலந்துரையாடலில் சகல சுருட்டு உற்பத்தியாளரையும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

### நன்கொடை

கர்நாடக வன்முறையால் பாதிக்கப்பட்ட தமிழர் நலனுக்கென பிரபல நடிகர் பிரபு ஒரு லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இனப்பிரச்சினை:

## மூப்பனாருடன் செல்லச்சாமி தமிழகத்தில் சந்திப்பு

தற்போது தமிழகம் சென்றுள்ள இ.தொ.கா. பொதுச் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமான எம் எஸ். செல்லச்சாமி இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜி கருப்பையாமூப்பனாருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்,

இ.தொ.கா. முன்வைத்துள்ள சமாதானத் திட்டம் பற்றி அவர் திரு.கருப்பையா மூப்பனாரிடம் விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கப்பலில் வரும் அரசாங்க ஊழியர்க்கு முற்பணம்

முதற் தொகுதி அகதிகள் பட்டியலில் இடம்பெற்றுத் தமிழகத்திலிருந்து திருகோணமலைத் துறைமுகம் வந்தடையவுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு 1000 ரூபா முற்பணம் வழங்கப்படவுள்ளது.

முதற் தொகுதியில் வருவோரில் பெரும்பாலானோர் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருப்பர் என்றும் எதிர்வரும் 22 ஆம் திகதி கப்பலில் வரும் அகதிகளைப் புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்னவும், அதிகாரிகளும் வரவேற்பர் என்றும் வசிப்பிட வசதியற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் உப்புவெளியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வைத்துப் பராமரிக்கப்படுவர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரி...


உங்கள் அடுத்த உணவு வேளைக்கு விஜயம் செய்யுங்கள்

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

19/3 கொழும்புத்துறை-சாலை,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டிக்குளி


## சுருட்டுத் தொழிலாளர் குடும்ப நலன் கருதி...

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர் குடும்பங்களின் நலன் கருதித் தொழிற் பயிற்சித் தொழிற்கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. தற்போது சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சி வகுப்பை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே இச்சங்கத்தால் சுருட்டுத் தொழிலாளர் குடும்பப் பெண்களுக்குத் தையற் தொழிற் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. (14)

## தொண்டர் ஆசிரியர் தெரிவு; புகார்கள் பற்றி விசாரணை

கல்முனை, அம்பாறை கல்வி மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டது சம்பந்தமான புகார்கள் விசாரணை செய்யப்படவுள்ளன. இதற்கென விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களைத் தெரிதல் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யவும், புகார்களை விசாரணை செய்யவும் இவ்விசாரணைக்குழு பணிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியராக நியமிப்பதற்குச் சிபார்சு செய்யப்பட்டவர்கள் சகலரதும் பெயர்ப்பட்டியல்கள் அந்தந்தப் பாடசாலைகளிலும், கிராம சேவை அலுவலர் காரியாலயங்களிலும், உதவி அரச அதிபர் அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றிலும் பார்வைக்கு வைக்கப்படுமென்றும், தெரிவு செய்யப்படாதவர்களுக்கு அவர்கள் கற்பித்த பாடசாலை அதிபர்களுக்கும் பிரதியுடன் தெரிவு செய்யப்படாமைக்குரிய காரணங்கள் கடிதம் மூலம் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

### நாளை சபை கூடுகிறது

இவ் வருடத்தில் பாராளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை முதன் முறையாகக் கூடவுள்ளது.

தொடர்ந்து நான்கு நாள்களுக்குச் சபைக் கூட்டத் தொடர் இடம்பெறும்.

### கலைமாமணி விருதுகள்

1991- 1992 -ம் வருடத்துக்கான கலைமாமணி விருதுகள் தமிழக அரசினால் பழம்பெரும் பின்னணிப் பாடகி பி.லீலா, சீர்காழிசிவசிதம்பரம் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளன


சுண்டிக்குளியில் மக்களின் நலன் கருதி
நடைபெறுகின்றது

நியாய விலைச் சந்தை

உங்களுக்குத் தேவையான சகல வித வீட்டுப் பாவனைப் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

நியாய விலைச் சந்தை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை
19/3 கொழும்புத்துறைச்சாலை, சுண்டிக்குளி.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01038

கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டிக்குளி

01046

யங்களில் வைத்துப் பராமரிக்கப்படுவர் என்றும் கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

01038

---

நெல்லியடியில் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

## நியாய விலைக் கடை

வங்கி அருகில், நெல்லியடி.

வடமராட்சி மக்களின் நன்மை கருதி அவர்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றது

## நெல்லியடி
## நியாய விலைக் கடை

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
நெல் மற்றும் உபதானியங்களைக் கொள்வனவு செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒரு முறை விஜயம் செய்து உங்கள் சந்தேகத்தைப்
பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01042

---

கொடிகாமம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!
மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை கிடைக்கச் செய்ய வழிவகுக்கின்றது.

## நியாய விலைக் கடை

புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்

உங்களுக்குத் தேவையான சகல மனைப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

## நியாய விலைக் கடை

புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.

நெல் மற்றும் உபதானியங்கள் கொள்வனவு
செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01040

---

கொக்குவில் மக்களுக்கு
ஓர் நற்செய்தி

## நியாய விலை தேங்காய் கடை

தேங்காய்,
தேங்காய் மட்டை,
சூரி மட்டை,
விறகு ஆகியவற்றை

இல்லத்தரசிகளின் நாளாந்தத் தேவைகளுக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

## நியாய விலை தேங்காய் கடை

பொற்பதி வீதி,
(கொக்குவில் பழைய புகையிரத நிலைய சந்தி)
கொக்குவில்.

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

0104 4

### ★ பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்த

# அராஜக இனவெறிச் சக்திகள் மீண்டும் தலைதூக்குகின்றன

## இ.தொ.கா. கண்டனம்

''இனவெறி அராஜகச் சக்திகள் மீண்டும் தலை தூக்குகின்றன'' என்று திரு எஸ். தொண்டமானின் யோசனையை வலியுறுத்தி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

''பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அன்று எதிர்த்த அதே இனவாத சக்திகளே மீண்டும் இன்று தலையெடுத்து இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைக் குழப்புகின்றன'' என்று இ. தொ. கா உயர் வட்டாரங்கள் நேற்று முன் தினம் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திரு. தொண்டமான் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி பல்வேறு தரப்பினர் தெரிவிக்கும் விமர்சனங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி வட்டாரங்கள் இவ்வாறு கூறின.

## இந்திய அணியை ஆஸி அணி தோற்கடித்தது

அவுஸ்திரேலியாவில் 3 நாடுகளுக்கு இடையில் நடைபெற்றுவந்த சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் பந்தயத்தின் இறுதி மூன்று ஆட்டங்களின் முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை 88 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 பந்து மாற்றங்களில் 5 இலக்குகள் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டேவிட் பூன் 78 ஓட்டங்களையும், டீஜோன்ஸ் 73 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்

இந்திய அணி அதன் துடுப்பாட்டத்தில் 42 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருனால் தோல்வியைத் தழுவிக்கொண்டது. சிறிகாந்த் சிறப்பாக ஆடி 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (16)

## காசு வரும், போகும் கல்வி வரும் ...

கல்வியின் முக்கியத்துவம் குறித்து தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ள புதுமொழிகள் சில:

- ★ இன்றைய சரஸ்வதி, நாளைய லட்சுமி.
- ★ எண்ணும், எழுத்தும் பயின்றிடுவோம், விண்ணையும் கட்டி ஆண்டிடுவோம்.
- ★ என்றும் இருப்பது கல்விவளம் எண்ணிப் பயின்றால் என்றும் நலம்.
- ★ கவலையற்ற எதிர்காலத்துக்கு கல்வியே நிகழ்காலம்.
- ★ காசு வரும், போகும் கல்வி வரும் போகாது.

## நம் மண்ணின் மைந்தனுக்கு சவூதி அரசின் கௌரவம

ஆண்டுதோறும் சவூதியில் ஒரு விளையாட்டு வீரருக்கு சவூதி அரசு வழங்கும் சுப்பர்ஸ்ரார் விருதை இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு பஞ்சரட்ணம் என்ற வீரர் பெற்று நம் மண்ணிற்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் முன்னை நாள் கோல் காப்பு வீரரான பஞ்சரத்ணம் சவூதியிலும் தன் திறமையைக்காட்டி பல தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

இவர் சிறந்த உதைபந்தாட்டவீரர் என்பதுடன் தலைசிறந்தநீச்சல் வீரருமாவார் இங்கிலாந்தில் நீச்சல்துறையில் பயிற்சி பெற்ற இவர் தற்பொழுது சவூதியில் வெளிநாட்டு தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உதைபந்தாட்டம், நீச்சல் பயிற்றுநராக கடமைபுரிந்து வருகிறார். சவூதியில் மாதம் ஒருமுறை வெளிவரும் றெக்கிறியேசன் போக்கஸ் (Recreation Focus) என்ற விளையாட்டுத்துறை சஞ்சிகை முன்பக்கத்தில் தை மாத வெளியீட்டில் இவரின் உருவப்படத்தை வெளியிட்டு கடந்த காலத்தில் இவர் விளையாட்டுத் துறையில் தாய் நாட்டிலும் இங்கிலாந்து, சவூதி ஆகிய நாடுகளிலும் நிகழ்த்திய சாதனைகளை விரிவாகப் பிரசுரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான வலியுறுத்தல்

25 ஆவது உலக சமாதான தினத்தை முன்னிட்டுப் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் சமாதானச்செய்தியொன்றை விடுத்துள்ளார்.

உலகில் சமாதானக் குறிக்கோள் உண்மையில் முன்னேற்றமடைந்துள்ளதா இல்லையா அல்லது அண்மைக் காலத்தில் நடந்த அவல நிகழ்வுகளால் அவற்றுட் சில வருந்தத்தக்க விதத்தில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று பாப்பரசர் தனது சமாதானச் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்,

பாதுகாப்பு, சுதந்திரம், பங்குரிமை, ஒருமைப்பாடு ஆகியவற்றில் அனைவரும்

# 'விடுதலைப்புலிகளின் போராட்ட பெருமை; சர்வதேசம் அறியும்'

'சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு எப்பொழுதும் தயாராக உள்ளோம் சிங்கள அரசுதான் இதற்குத் தயாராக இல்லை என்பதைச் சர்வதேசமே அறியும் எத்தனையோ சர்வதேசப் பிரதிநிதிகளுடன் கதைத்தபோதும் இதையே சமிக்கை காட்டி வந்துள்ளோம். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் ... ஆதரித்தோம்.

அதற்காகதொண்டமானின் வருகையையும் மகிழ்வுடன் எதிர் பார்த்தவேளை பிரேமதாச அரசும் இந்திய அரசும் திரை மறைவில் இருந்து கொண்டு துவேசத்தை எழுப்பக் கூடிய விதத்தில் பாராளுமன்றக்குழுவையும் புத்தபிக்குகளையும் தூண்டி வருகின்றன என்றார்.

வல்வை திருவல் புனித... விடுக்கின்றது.

புலிகளின் போராட்டம் யாழ் குடாநாடு இதை உலகம் நன்கறியும் இதை சிங்கள அரசும் அறியும் என்றும் போருக்குத் தயாரான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.

முடிந்தால் யாழ் வந்து பார்க்கட்டும் புலிகளின் திறமையால்தான் தமிழீழம்

நேற்றையதொடர்ச்சி .....

## வதிவிட வேளாண்மை; முக்கிய செயற்பாடுகள்

எமது அன்றாட வாழ்வில் இரும்பு, கரட்டின் போன்ற கனிப்பொருட்களையும் உயிர்ச்சத்து ஏ, சி, யையும் கொண்ட உள்ளூர் இலைக்கறி வகைகளான கீரை, பொன்னாங்காணி, பசளி, வல்லாரை, சங்குக்கீரை, அகத்தி, கோவா போன்றவற்றுடன் இயற்கையாகவே வரட்சியை தாங்கி வளரக் கூடிய தவசி முருங்கை, கறிமுருங்கை, தூதுவளை, முசுட்டை, குறிஞ்சா போன்றவற்றை பயிரிட வேண்டும். சமைக்காமல் உண்ணக்கூடிய சலாது எமது பிரதேசத்தில் நன்கு வளர்ந்து பயன்தரக்கூடியது. மிளகாய், வெண்காயம், கறிவேப்பிலை, றம்பை, இஞ்சி போன்ற வாசனையூட்டும் பயிர்கள் பயிரிடப்பட வேண்டும். மரக்கறிப்பயிர்களில் முக்கியமாக கத்தரி, தக்காளி, வெண்டி, கறிமிளகாய், பயற்றை, புசிற்றாவோ, போஞ்சி, புடோல், பாகல், பீர்க்கு, கரட், முள்ளங்கி, கோவா பூக்கோவா போன்றவற்றை குறிப்பிடலாம் கிழங்கு வகைப்பயிர்களில் மரவள்ளி, சட்டிக்கரணை, இராசவள்ளி, வத்தாளை போன்றவற்றை பயிரிட வேண்டும்.

உடலுக்குத் தேவையான கனிப் பொருள்கள், உயிர்ச்சத்துக்கள், வெல்லம் சமிபாட்டுக்கு உதவும் நொதியங்கள் கொண்ட பப்பாசி, வாழை, மா, கொய்யா, தோடை, கொடித் தோடை, மாதுளை, பலா, நெல்லி போன்ற பழப் பயிர்கள் பயிரிடப்பட வேண்டும். இங்குள்ள மண்ணும் காலநிலையும் மற்றைய இடங்களைவிட சகல பழங்கள் தரக் கூடியது. லெமன், எலுமிச்சை போன்ற கனி மரங்களும் இடம்பெற வேண்டும்.

இடவசதி இருக்குமாயின் தென்னை, கமுகுடன், கால்நடைத் தீவனங்களாக இப்பில் இப்பில், முள்முருக்கு, கிளிசிரிடியா, (சீமைக்கிளுவை) வெட்டிப்புல் என்பவற்றை வேலிகளில் அல்லது வேலி ஓரங்களில் பயிரிட வேண்டும் வேலிகள் மதிலால் கட்டப்பட்டு இருந்தால் மதில் ஓரத்தில் இவற்றை நாட்டிக் கொள்ள வேண்டும். ஈரலிப்பான இடங்களில் வாழை இலைக்கறிப் பயிர்களும், உலர்வான இடங்களில் பருப்பு, கிழங்குவகை, பழவகை, பயிர்களையும் பயிரிடலாம் பந்தலில் அல்லது வேலிகளில் ராணி அவரை, பயற்றை, புடோல், பாகல், வெள்ளரி போன்ற பயிர்களும் பயிரிடலாம் பந்தலின் கீழ் வற்றாளை, கீரைவகைகளும் பயிரிடலாம். வீட்டு வேலிகளில் முருங்கை, அகத்தி, சண்டி, தூதுவளை, முசுட்டை போன்றவற்றைப் பயிரிடலாம் பலாண்டு பயிர்களை நடும் போது சேராக் காய்க்கும் சிறந்த இனங்களைப் பயிரிட வேண்டும். ஏனெனில் பயிர்கள் காய்க்கத் தொடங்கியதும் இடம் மாற்றி நடமுடியாது.

அவற்றின் நிழலால் சிறிய பயிர்கள் பாதிக்காதவாறுபயிரிட வேண்டும். பயிர்களைக் கலந்து பயிரிடல் வேண்டும். உதாரணமாகக்கோவா பயிர்களிடையே தக்காளி பயிரிட்டால் கோவாவைத்தாக்கும் டயமன் முதுகு அந்து கட்டுப்படுத்தப்படுகிறது. அதேநேரம் குறைந்த இடவசதிகூடுதலான பயிர்களைச்செய்யக் கூடியதாக இருக்கும். பழ மரங்கள் அல்லது தென்னை நாட்டியவுடன் அவற்றின் ஊடுகளில் ஊடு பயிர்கள் செய்வதனால் வீணாகும் நிலம் பயன்படும். வளர்ந்து நிழல் கொடுக்கத் தொடங்கியதும் ஊடுபயிர் செய்யக் கூடாது ஒரே இடத்தில் ஒரேவகை பயிர் பயிரிடாமல் மாறிமாறி அறுவடை முடிய மாற்றுப்பயிர்கள் செய்தல் வேண்டும். மாரிகாலத்தில் மேடையாக உயர் பாத்திகள் அமைத்து நீர் தேங்குமிடங்களில் பயிரிடலாம். நகர்ப்புறங்களில் பயிர் செய்ய இடம் அற்றோர் சாடிகளில் மரக்கறிப் பயிர்களைப் பயிரிட்டுப் பயன் பெறலாம். மரப்பெட்டிகளில் மண், எரு நிரப்பி வேர் ஆழம் குறைந்த பயிர் பயிரிடலாம். சவர் நிலம் உள்ளவர்கள் மழைக்காலத்தில் நிலக்கடலை, பீற்றூட், வெங்காயம், மிளகாய், எள்ளு வற்றாளை, தக்காளி, மாதுளை, பப்பாசி, கொய்யா நெல்லி போன்ற பயிர்களை வெற்றிகரமாகப் பயிரிடலாம் வதிவிடப் பயிர் செய்கை மேற்கொள்ளும்போது மேலதிகமான மரக்கறி, பழங்கள் ஆகியவற்றை வற்றல், ஊறுகாய், அச்சாறு, பழரசம், பழப்பாகு என்பன தயாரித்துப் பற்றாக்குறையான காலத்தில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

இணைப்பு:—

பயிர்களுக்கு கொடுக்க வேண்டிய பராமரிப்பு செய்யப்

'சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு எப்பொழுதும் தயாராக உள்ளோம் சிங்கள அரசுதான் இதற்குத் தயாராக இல்லை என்பதைச் சர்வதேசமே அறியும் எத்தனையோ சர்வதேசப் பிரதிநிதிகளுடன் கதைத்த போதும் இதையே சமிக்கை காட்டி வந்துள்ளோம். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

தொண்டமானையும் அந்த அடிப்படையில்தான் நாம் வரவேற்கின்றோம். தொண்டமானைத் தேடி நாம் செல்லவில்லை. தொண்டமான்தான் எம்மை நாடி தனது பிரதிநிதியை அனுப்பி வைத்தார் தொண்டமானின் தீர்வுத் திட்டம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சி என்பதைத்தான் சொல்கின்றது. இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதாகும். இத் தீர்வை பிரேமதாச அரசும் இந்திய அரசும் திரை மறைவில் இருந்து குழப்பி வருகின்றன.

தொண்டமானின் தீர்வு அறிக்கை பல வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. அதைப் பல வெளிநாடுகளும் அங்கீகரித்தன. அதன் காரணமாக பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் வந்தார்கள். அவர்களின் கோரிக்கைகளில் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியவற்றை ஆதரித்தோம்.

அதற்காக தொண்டமானின் வருகையையும் மக்கள் எதிர்பார்த்த வேளை பிரேமதாச அரசும் இந்திய அரசும் திரைமறைவில் இருந்து கொண்டு துவேசத்தை எழுப்பக் கூடிய விதத்தில் பாராளுமன்றக் குழுவையும் புத்தபிக்குகளையும் குழப்பி வருகின்றன என்றார்.

வல்வை திருவில் புனித மைதானத்தில் அமைந்துள்ள போராளிகளின் சிலைகளை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

வல்வைப் பொறுப்பாளர் சங்கிலி தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் பேசுகையில்,

புலிகள் என்றும் தமது தமிழீழத் தாயகத்தை மீட்பதற்குத் தயங்குபவர்கள் அல்லர் அதற்கான அவர்களின் போராட்டத்தை சர்வதேசமும் அறியும் மக்களின் சில துன்பங்களைப் போக்கவும் தமிழர் பொருளாதாரத்தைச் சீர் செய்வதற்காகவுமே நாம் இடையிடையே வரும் பேச்சுவார்த்தை, ஒப்பந்தம்போன்றவைகளை ஆதரித்தோம், அப்படி நாம் சமாதானம் பேச்சுவார்த்தை என்று ஏற்கின்ற போது, ஸ்ரீலங்கா அரசும், இந்திய அரசும் புலிகள் பலவீனம் அடைந்ததாக எடை போட்டுப் போர் தொடுத்து புறமுதுகிட்டு ஓடியதும் நாடறியும்.

இப்போதும் சிங்கள அரசு யாழ் குடாநாட்டைப் பிடிப்போம் என்று அறைகூவல் விடுக்கின்றது.

புலிகளின் கோட்டை யாழ் குடாநாடு இதை உலகம் நன்கறியும் இதை சிங்கள அரசும் அறியும் என்றும் போருக்குத் தயாரான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.

முடிந்தால் யாழ் வந்து பார்க்கட்டும் புலிகளின் திறமையால்தான் தமிழீழம் பெறமுடியும் என்பதை நேரில் காணட்டும் அதன் பின் பேச்சு வார்த்தைகள், சமாதானம் ஒப்பந்தம் என்பவை யாவும் பயனற்றவையாகப் போய் தமிழீழம் ஒன்று சுதந்திரமாக உருவாகும், என்றார்;

லையா அல்லது அண்மைக் காலத்தில் நடந்த அவல நிகழ்வுகளால் அவற்றுட் சில வருந்தத்தக்க விதத்தில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று பாப்பரசர் தனது சமாதானச் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்,

பாதுகாப்பு, சுதந்திரம், பங்குரிமை, ஒருமைபாடு ஆகியவற்றில் அனைவரும் பொதுநோக்குடன் செயற்பட வேண்டுமென்றும், சமாதானத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்க மனுக்குலத்தவர்கள் எல்லோரும் முன்வரவேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துவார். (14)

## 'ஆயுதங்கள் களைவு'

'கிரேட நடவடிக்கைப் பணியக ஆயுதங்கள் யாவும் களையப்பட்டன' என்று கொழும்பு ஏரிக்கரை ஏடுகளில் ஒன்றான 'தினகரன்' நேற்று வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் கூறியுள்ளது.

## நான்கு மை

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும், எழுத்தாளர் கல்கியும் ஒருமுறை சந்தித்துக் கொண்டார்கள்

எனக்குக் கதை எழுத ஆசையாக இருக்கிறது எப்படி எழுதுவது? கலைவாணர் கேட்டார். கதை எழுத நாலு மை வேண்டும் என்று கல்கி சொன்னார். என்ன, என்ன கலர் மை? என்று கலைவாணர் சிரித்துக்கொண்டே கேட்டார். அதற்குக் கல்கி சொன்னார் கலர் மை அல்ல ஒன்று திறமை, இரண்டு பேனை மை, மூன்று தனிமை. நாலு பொறுமை. உடனே கலைவாணர் சொன்னார் உங்கள் யோசனை அருமை.

களில் மரக்கறிப் பயிர்களைப் பயிரிட்டுப் பயன் பெறலாம். மரப்பெட்டிகளில் மண், எரு நிரப்பி வேர் ஆழம் குறைந்த பயிர் பயிரிடலாம். சவர் நிலம் உள்ளவர்கள் மழைக்காலத்தில் நிலக்கடலை, பீற்றூட், வெங்காயம், மிளகாய், எள்ளு வற்றாளை, தக்காளி, மாதுளை, பப்பாசி. கொய்யா நெல்லி போன்ற பயிர்களை வெற்றிகரமாகப் பயிரிடலாம் வதிவிடப் பயிர் செய்கை மேற்கொள்ளும்போது மேலதிகமான மரக்கறி, பழங்கள் ஆகியவற்றை வற்றல், ஊறுகாய், அச்சாறு, பழரசம், பழப்பாகு என்பன தயாரித்துப் பற்றாக்குறையான காலத்தில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

இணைப்பு:—

பயிர்களுக்கு கொடுக்க வேண்டிய சிபார்சு செய்யப்பட்ட இடைவெளிகள்

1. வெண்டி 75X75 ச.மீ 2. கரட் 25X5 ச.மீ
3, கத்தரி 1X1 ச மீ 4. செடி போஞ்சி 25X10 ச.மீ
5, மிளகாய்75×60 ச.மீ 6, கொடிபோஞ்சி 35×45 ச மீ
7. பயற்றை 100×30 ச மீ 8. மரவள்ளி 90×90 ச,மீ
9. தக்காளி 60×30 ச.மீ 10. வல்லாரை 20×20 ச.மீ
11. புடோல் 1½×1ச.மீ 12 பொன்னாங்காணி30×30ச.மீ
13. பாகல் 1¼×1மீ 14. பசளி 30×30 ச.மீ
15. பீர்க்கு 1¼×1 மீ 16. கங்குன் 45X20 ச.மீ
17. கறிமிளகாய் 60×60 ச.மீ 18. அகத்தி 2½×2½ ச.மீ
19, கோவா 50×40 ச,மீ 20, முருங்கை 2½×3½ மீ
21, பீற்றூட் 30X10 ச மீ 22, சலாது 30×30 ச,மீ
23, பசிறறாவோ 125 × 10 ச, மீ 24. சிறகவரை 1 × 1 மீ 25, மாதுளை 4× 3 மீ
26. வாழை 3 × 3 மீ 27. பப்பாசி 3 × 3 மீ
28. மா பெரிது 12 × 12 மீ விலாட் 8 × 8 மீ
29. கொய்யா 4 × 4 மீ 30. தோடை 6 × 4 மீ
31, எலுமிச்சை 4 × 3 மீ 32, லெமன் 2 X 2மீ
33, கொடித்தோடை 4 X 2 மீ
34, தென்னை 5X5 மீ

குறிப்பு:- முதலாவதாகவுள்ள இலக்கம் வரிக்களுக்கிடையிலுள்ள இடைத்தூரத்தையும் இரண்டாவதாகவுள்ள இலக்கம் வரிசையில் உள்ள இடைத்தூரத்தையும் குறிக்கிறது,

ச. மீ சதமமீற்றர் மீ. மீற்றர் 30 ச. மீ 1 அடி,

(முற்றும்)

# புங்குடுதீவில் இருந்து இருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதி

புங்குடுதீவில் இருந்துநேற்று முன்தினம் இருவர் கடும் நோய் காரணமாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

மருதப்பு சிவசுப்பிரமணியம் (42) 6ஆம் வட்டாரம் புங்குடுதீவு, பசுபதிப்பிள்ளை நாகராசா (51) 3ஆம் வட்டாரம் ஆகியோரே சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலம் கப்பலில் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் இருவருக்கும் கடும்நோய் ஏற்பட்டதாகவும் படையினரிடம் முறையிட்டபோது எதுவும் கவனிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிப்பதாக படையினர் கூறினராம்.

தொடர்ந்து நான்கு நாள்கள் அங்கு தடுத்துவைக்கப்பட்டு, நோய் அதிகரிக்கவே அங்கிருந்து காங்கேசன்துறை ஊடாக கப்பலில் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் இருவரும் யாழ் பெரியாஸ்பத்திரியில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர் (07)

## ஜெயலலிதா சவால்

## 'தடா' சட்ட துஷ்பிரயோகம் சுட்டிக்காட்ட முடியுமா?

"தடா சட்டத்தை நான் துஷ்பிரயோகம் செய்திருந்தால் அச்சம்பவம் ஒன்றையேனும் சுட்டிக்காட்ட முடியுமா" எனச் சவால் விடுத்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

வட ஆற்காட்டில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அண்மையில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

"லொறி ஒன்றினால் என்னைக் கொலை முயன்றவர்களை பழிவாங்கினேனா? எனக்கு அப்போது மருத்துவ வசதி கிட்டாது தடுத்தவர் மீது தடா சட்டத்தை ஏவினேனா? தங்களது கடந்த கால நடவடிக்கைகாரணமாக பீதி கொண்டிருப்பவர்களே ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை என்மீது சுமத்துகின்றனர்.

சுயவிளம்பரத்திற்காகவே தாம் கைது செய்யப்படப் போகின்றோம் என வதந்திகளை பரப்புகின்றனர் என அவர் குற்றஞ்சாட்டினார். 08

## பதுளையில் விடுதலையானவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதாகிதடுத்து வைக்கப்பட்டு விடுதலையான மலையக தோட்டத்தொழிலாளியான அந்தோனி கிறிஸ்டர் பதுளை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

லுணுகல அடாவத்தை பாக தோட்டத்தைச் சேர்ந்த இவர் விடுதலையானதும் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற லுணுகல ஆஸ்பத்திரிக்குச் சென்று பின்னர் கடும் சுகயீனம் ஏற்படவே பதுளை பெரியாஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டார்.

இவரது மரணம் குறித்து புதிய பதுளை மாவட்ட இ.தொ.கா. எம்.பி. டின் சென்னன் ஜனாதிபதிக்கு தந்தி மூலம் புகார் செய்துள்ளார். (08)

## விசேட பொலிஸ் பணியகம் கலைக்கப்பட்டது!

பிரதிப்பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தலைமையில் இயங்கிவந்த விசேட பொலிஸ் நடவடிக்கை பணியகம் (P. S O) கலைக்கப்பட்டுள்ளது இதன்கீழிருந்த சகல ஆயுதங்களும் பாதுகாப்பு அமைச்சினால் மீளப்பெறப்பட்டுள்ளன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உடுகம்பொல கட்டாயலீவில் செல்லப்பணிக்கப்பட்டமை தெரிந்தே.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஒய்வுபெறவிருந்த உடுகம்பொல (57) மேற்கொண்டும் பதவி நீடிப்புப் பெறமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி நடவடிக்கை காலங்களில் இவரின் மனித உரிமை மீறல் தொடர்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதால் ஸ்ரீலங்கா அரசு இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓமப்புகையைக் கண்டு பிரெஞ்சு நடிகைகள் ஓட்டம்

பங்களூரில் சர்வதேச திரைப்பட விழா ஆரம்பமானபோது கர்நாடக திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவர் காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக மேடையில் ஏறி பெரும் ஆர்ப்பாட்டம் செய்தார்.

திரைப்படத் தயாரிப்பாளர் மேடையில் ஏறிக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்ததால் அரங்கில் பெரும் அமளி ஏற்பட்டது. பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

இவ் வேளையில் அரங்கில் ஒரு பகுதியில் ஆரம்ப விழாவை ஆசீர்வதித்து நடத்தப்பட்ட சமயக் கிரியையின் போது பெரும் புகை மண்டலம் எழுந்தது.

இதைக் கண்ட முன்வரிசையிலிருந்த மூன்று பிரெஞ்சு நடிகைகள் ஆர்ப்பாட்டக்காரர் தாக்குதல் நடத்துவதாக எண்ணி அரங்கை விட்டு ஓடினர். எனினும் பின்னர் நிலைமை விளக்கப்பட்டு அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

திரைப்பட விழாவைக் குழப்புவோம் என கர்நாடக விவசாயிகள் சங்கம் முன்னர் எச்சரித்திருந்தமை தெரிந்ததே (08)

சீனாவின்— களை மீறுகின்றன என்று சீனா வன்மையாகக் கண்டித்துள்ளது.

மூன்றாவது மண்டல நாடுகளில் இருந்து அமெரிக்க டாக்டர்கள் மனித உடல் உறுப்புகளை இறக்குமதி செய்கிறார்கள் இது மனித உரிமைகளை மீறும் செயல் இல்லையா எனக் கேட்கிறது சீனா.

இந்த மனித உடல் உறுப்புகள் அமெரிக்கச் செல்வந்தர்களுக்கு உபயோகப்படுவதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேலிய... லக் குறியாகிவிட்டது.

இதனிடையே பிரதமர் ஷமீர் தனது கட்சியைக் கூட்டி எதிர்காலநடவடிக்கைகுறித்து ஆராய்ந்தார் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருந்த பொதுத்தேர்தலை தற்போது ஜூன் மாதம் நடத்த வேண்டி ஏற்பட்டுள்ளது

ஜாலஙங்களில்— ளது.

முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் கொழும்பு தபால் திணைக்கள அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 06

வடமராட்சி— ஆகிய கிராமங்களில் தமது சொந்த வீடுகளில் மீளவும் குடியேறியுள்ளனர்.

மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து தாளையடி றோ. க. வித்தியாலயம், மருதங்கேணி இந்து த. க. வித்தியாலயம் ஆகியன இந்த (தவணை தொடக்கம்

அமைதிப்படை... அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டபோது அவர்கள் உடம்பில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகவும்

## புங்குடுதீவு ஓய்வூதியர்களுக்கு இராணுவத்தினரின் கெடுபிடி

புங்குடுதீவில் தங்கியுள்ள வயோதிப ஓய்வூதியர்களைக் கொண்டு சிவில் நிர்வாகம் நடத்த அங்குள்ள படையினர் நிர்ப்பந்தித்து வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

உதவி அரச அதிபர் காரியாலயம், கிராமசேவகர் அலுவலகம் என்பவற்றை இவர்கள் மூலம் செயற்படுத்த இராணுவம் முயல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் வயோதிப ஆசிரியர்களை நியமித்து அவற்றை இயங்கச் செய்யவும் முயலின்றனராம்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை இம்மாதம் 1ஆம் திகதி படையினர் இயங்க வைத்ததாகவும் சுமார் 90 மாணவர்களே சமுகமளித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை உபகரணங்கள் இல்லாத நிலையிலேயே மாணவர்கள் கல்விகற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவில் இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் மருந்துவகைகள் இன்றியும் உரியசிகிச்சைகள் இல்லாத நிலையும் அப்பகுதியில் சுமார் 30பேர் வரையில் இறந்துள்ளனர்.

திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி(55), திருமதி இராசம்மா செல்லப்பா(76), எஸ். வேலாயுதம்(56), சின்னத்தம்பி சபாரட்ணம் (60, செல்வி இரத்தினம் ஆறுமுகம் (38) மனநோயாளி உட்பட உரியசிகிச்சையின்றி 30 பேர் மரணமானவர்களாவர்

பல வயோதிபர்களே இறந்தவர்களில் கூடுதலானோர் ஆவர்

பனி. குளிரினால் நொய்வு வருத்தத்திற்குள்ளாகியே பலர் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

50 பேர் வரையில் நொய்வினால் அவதிப்படுவதாகவும் இன்னும் பலநோயாளர்கள் படுத்தபடுக்கையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (07

### யாழ் கல்வித் திணைக்களத்தில்

## இடமாற்ற சபை மூலம் ஆசிரியர் இடமாற்றம்

யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் இடமாற்றச்சபை நீண்ட காலத்தின் பின்னர் இவ்வார இறுதியில் கூட்டப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இடமாற்றச்சபை மூலம் யாழ் மாவட்டத்தில் செய்யப்படாத ஆசிரிய இடமாற்றங்களைக் கண்டித்து வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அண்மையில் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ள கண்டிப்பான அறிவிப்பையடுத்து இந்த ஆண்டு இடமாற்றங்கள் மேற்படி சபை மூலம் தீர்மானிக்கப்படவுள்ளது.

இந்த இடமாற்றச் சபையில் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குரிய பிரதிபணிப்பாளர்களும் கல்வித் திணைக்கள நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அங்கம்வகிப்பர்

காணாமற்... சாட்டுகள் குறித்தே இவர்

### 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் அஸ்தமனம்

11-1-56  20-1-89

# பசுபதி திருமாவளவன்

நீ மரணித்து மூன்றாண்டுகள் ஓடி மறைந்தன
உன்னைப் பெற்றவர் இவ்வுலகில் இல்லை
உனக்கு ஒன்பது வயதில்
உடன்பிறந்தாளுமில்லை - உன் பத்தொன்பது வயதில்
நீயுமில்லை முப்பத்துமூன்று வயதில்
உங்கள் பேரிழப்புக்களால் துன்பச்சுமை
தாங்கிளானோம்
நீ மறைந்தாலும் உடன் பிறந்தார் நலன்
-வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கவும்

உன் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
அம்மா,
உடன் பிறந்தவர்கள்,
மைத்துனர், உறவினர்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை'

01047

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 20-01-1992 இல் அச்சிட்டுவெளிவிடப்பெறற்து

தத் (தவணை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன.

இக் கிராமங்களில் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கக்கிளைகளை ஆரம்பிக்கும் முயற்சிகளை அம்பனில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் செய்து வருகின்றனர். (27)

---

வளலாய் ...
லில் இப் படையினர் இதலத்திலேயே பலியாகினர்.

படையினரிட மிருந்து ஏ கே. எல் எம் ஜி-1, ரம் மகஸின் -1, விங்-100, 7.62 ரக ரவைகள் 100 என்பன கைப்பற்றப்பட்டன.
( 43, 07, 08, 09, 06, 20 )

---

இரு கப்பல்கள் ..
அரிசி, சீனி, பருப்பு முதலியன வற்றுடன் ஓரளவு மருந்துப் பொருள்கள், தபாற் பொதிகள் என்பன இக் கப்பலில் எடுத்துவரப்படவுள்ளன.

லிலி லில்லி கப்பல் எதிர் வரும் புதன்கிழமை பருத்தித் துறைக்கு வரவுள்ளது,

இதிலும் உணவுப் பொருள்களும் பாடசாலைப் புத்தகங்களும் வந்து சேரவுள்ளதாக தெரியவருகிறது. (07

அவ் வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (08)

---

பாடசாலை —
சண்டாளன் வித்தியாலயத்தில் 'சார்க் நாடுகள்' பற்றி காருகபாலன், சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தில் 'வளர்ந்து வரும் உலகமும் விஞ்ஞான தொழில் நுட்பமும்' பற்றி மூ. திலைலநாதன் ஆகியோர் விரிவுரை யாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

சந்திரசேகரனை—
எமக்கு தெரிந்திருக்கும், அவர் பற்றிய விவரங்களை கம்பியூட்டர் மூலம் தேடிவருகிறோம் எனக் குறிப்பிட்டார் (08)

---

சந்திரசேகரன்...
வரதனுக்கு புகலிடம் அளித்ததாக இம் மூவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் யாப்பு ஷரத்து 126 (3) ன் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ள இவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமை போல தெரிகிறது என நீதிபதி தெரிவித்துள்ளார்' (08)

தனது கொழும்பு விஜயத்தின் போது முக்கியத்துவம் அளித்துள்ளார் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

---

மல்வத்தை ..
ரம்புக்வல விபசி நாயக்க தேரோ அமைச்சர் தொண்டமானின் சமரஸத்திட்டத்தை கடுமையாக எதிர்பபதுடன் அவருக்கு எதிராக பகிரங்க அறிக்கைகளை அண்மைக் காலமாக வெளியிட்டுவருபவர் என்பது தெரிந்ததே,

யாழ்...
குடும்ப எண்ணிக்கையின் படி முன்னர் வழங்கப்பட்ட இலவச உலர் உணவு நிவாரணம் போன்றே இவை வழங்கபபடுகின்றன, 07

---

தைப் பொங்கலுக்கே..
வர விரும்புவதாகக் கூறியிருக்கிறார் அமைதியைக் குலைக்க அவர் முயன்றால் அதற்கு நாம் அனுமதியோம்'' எனவும் அவர் எச்சரித்தார் 08

## கழிவைக் காசாக்குவோம்

'லக்கிபிறே' 'ஹைலன்ட்' பால்மா வெற்றுப் பக்கற்றுக்கள் ரூபா 1/- வீதம் கொள்வனவு செய்யப்படும். பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள், கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையம், கற்பகா உற்பத்தி நிலையம் (கச்சேரியடி), ஆகியவற்றிலோ அல்லது சுன்னாகம். மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள சபையின் உற்பத்தி நிலையங்களிலோ அல்லது 53, கண்டி வீதி. யாழ்ப்பாணத்திலுள்ள சபையின் சந்தைப்படுத்தும் பகுதியிலோ நேரடியாக கையளித்து உடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பனை அபிவிருத்திச் சபை,

01048